

## 111 அடி உயர கம்பத்தில் பிரமாண்ட தேசிய கொடி

தாம்பரம், ஜன.27: தாம்பரத்தில் உள்ள தனியார் இன்
ஜினியரிங் கல்லூரியில் குடியரசு தின விழா நேற்று
கொண்டாடப்பட்டது. ஓய்வு பெற்ற கப்பற்படை அதி
காரி கேப்டன் சங்கர நாராயணன் பிரமாண்ட தேசிய
கொடியை ஏற்றி வைத்தார்.

111 அடி உயரம் கொண்ட கொடி கம்பத்தில் 36 அடி
உயரம், 24 அடி அகலத்தில் தயாரிக்கப்பட்ட தேசிய
கொடியை அவர் ஏற்றினார். தேசிய கொடி ஏற்றியதும்
கல்லூரி மற்றும் பள்ளி மாணவ, மாணவிகள் மரியாதை
செலுத்தினர்.

இந்த கொடி உயரமாக அமைக்க சிவில் விமான
போக்குவரத்து துறையினரிடம் அனுமதி வாங்கி
யுள்ளோம். பிரமாண்ட தேசிய கொடி 24 மணி நேரமும்
பறக்க மத்திய அரசிடம் சிறப்பு அனுமதி பெறப்பட்
டுள்ளது. 365 நாட்களும் கொடி பறக்கும். இரவு நேரத்தில்
கொடியின் அழகை ரசிக்க பிரமாண்ட விளக்குகள் கொ
கம்பத்தின் உச்சியில் அமைக்கப்பட்டுள்ளது எனவு
கல்லூரி நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

Dinamani 27/1/15
Tamil Newspape.